**தலைப்பு 247 – இலங்கை சுங்கம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 247 – இலங்கை சுங்கத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 யூன் 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை சுங்கத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் 1.6.1 (ஆ) (iii) பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள அவததானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கேள்வி வைப்பு கணக்கிற்கு ரூபா 3,845,000 தொகை பிழையாக வரவு வைத்தமையால் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளவாரு நிதி நிலைமைக் கூற்றில் வைப்புக் கணக்கின் மீதி அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டிற்குரிய கேள்வி வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்ட போது, மேலதிகமாக செலவு வைக்கப்பட்ட தொகை 3,845,000 தொகை 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத கணக்கில் பொழிப்புக்களில் சரி செய்யப்பட்டுள்ளது. | நிதி நிலைமைக் கூற்றில் சரியான வைப்புக் கணக்கு மீதியை உள்ளடக்குதல் வேண்டும். |

## (ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை சுங்கத்திற்கு சொந்தமான தற்போது பயன்படுத்தப்படுகின்ற ஓட்ட நிலைமையில் காணப்படுகின்ற ரூபா 68,500,000 பெறுமதியான 13 வாகனங்கள் கணக்கீடு செய்யப்படாமையினால் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டதுடன், அந்த வாகனங்களுக்கான பழுதுபார்த்தல் செலவினம், காப்புறுதி செலவினம் மற்றும் ஏனைய சேவை செலவினமாக ரூபா 1,424,171 செலவிடப்பட்டிருந்தது. | இலங்கை சுங்கத்திற்கு சொந்தமான தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 393,550,000 பெறுமதியுடைய 102 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட வாகனம் மற்றும் பெறுமதி தொடர்பாக பரீட்சித்து சரி செய்வதற்கு குறிப்பிடுகின்றோம். | சுங்கத்திற்கு சொந்தமான வாகனங்கள் யாவும் நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்ட 03 வாகனங்களின் பெறுமதியான ரூபா 4,250,000 பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்படாமையினால் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட வாகனங்கள் மற்றும் பெறுமதி தொடர்பாக பரீட்சித்து சரி செய்வதற்கு குறிப்பிடுகின்றோம். | கணக்காய்விற்கு கிடைத்த சொத்துக்களின் பெறுமதி விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்படல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதி திகதியல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணிகளின் பெறுமதி ரூபா 4,171,150,000 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், 16 காணிக் கூறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இலங்கை சுங்கத்திற்குரிய அரசாங்கத்தின் 09 காணிகளின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு 2023.05.29 ஆம் திகதிய Log/S/03/06-01B என்ற கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், | சுங்கத்திற்குரிய காணிகள் யாவும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதில் குறிப்பிடப்பட்ட 04 காணிக் கூறுகள் மாத்திரம் மதிப்பீட்டு பெறுமதி 2023.12.07, 2024.01.19 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய 05 காணிக் கூறுகளின் மதிப்பீட்டு பெறுமதி இது வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் உத்தியோகத்தர்கள் 2,204 பேர்களுக்காக சம்பளம், ஊதியம், மேலதிக நேரம், விடுமுறை தின சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு படிகளாக அரசாங்கத்தின் ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்து ரூபா 2,055,010,979 தொகையும் சுங்க மேலதிக கப்பல் பொருள் பரிசோதனை கட்டிடம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் மூலம் ரூபா 995,739,327 தொகையும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 3,050,750,306 செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த செலவினங்கள் தொடர்பான உறுதிப்படுத்தும் சான்றுகளான சேவைக்கு அறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்துகின்ற கைவிரல் அடையாள இயந்திர அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. வருகை மற்றும் வெளிச் செல்களை பதிவதற்காக பொது 18 படிவத்தின் பிரகாரம் முறையான பிரகாரம் கையப்பம் இடப்பட்ட பதிவேடு பேணிச் செல்லபடுகின்றமைக்கு சுங்க பணிப்பாளர் நாயகத்தால் பேணிச் செல்லபடுவதாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தால் | அரச நிர்வாக சுற்றறிக்கை 09/2009 இன் பிரகாரம் உத்தியோகத்தரின் வருகை மற்றும் வெளிச் செல்கை, கைவிரல் அடையாளம் பதிவின் இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், சுங்க திணைக்களத்தின் பணி தன்மையின் பிரகாரம் அதனை அமுல்படுத்துதல் நடைமுறையில் கஷ்டமாக இருந்தது. அதனால் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கை பதிவதற்காக பொது 18 படிவத்தின் பிரகாரம் முறையான பிரகாரம் கையெப்பம் இட்டு பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவதுடன், விடுமுறைப் பதிவேடு மற்றும் சங்க மேலதிக நேரத்திற்காக வேறொரு முறையான பதிவேடும் பேணிச் செல்லப்படுவதுடன், அதற்காக பதவிநிலை உத்தியோகத்தரால் அங்கீகாரம் வழங்குதல் மற்றும் உரிய | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாமை உத்தியோகத்தரின் வருகை மற்றும் வெளிச் செல்கை, வைிரல் அடையாளம் பதியும் இயந்தரம் பயன்படுத்துவதன் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், தாபன பணிப்பாளர் நாயகத்தின் 2023 செப்டம்பர் 26 ஆம் திகதிய கடிதத்தில் அவ்வாறான பதிவேடொன்று பயன்படுத்துவதாயின் அதில் குறிப்பிடப்பட்ட நேரம் கைவிரல் அடையாள இயந்திரத்திலும் குறிப்பிடுவதற்கு இயலும் என காண்பிக்கப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்தியதன் பின்னர் மேலதிக நேர கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை என்ற அவதானிப்புடன் இணங்கவில்லை என்பதுடன், அரச நிர்வாக சுற்றறிக்கை 09/2009 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை மாத்திரம் இணங்குகின்றோம். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

சுங்க பணிப்பாளர் நாயகத்தின் வருமான குறியீடு 13 இற்குரிய வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீடு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | | |
| மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 800,949 மில்லியன் ஆக இருந்ததுடன், பின்னர் அது ரூபா 628,054 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. அது ஆரம்ப மதிப்பீட்டில் 22 சதவீத குறைவாகும். ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 694,082 ஆக இருந்ததுடன், அதனை ஆரம்ப மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 87 சதவீதம் ஆகும். | பகுப்பாய்வு ரீதியான ஆய்வின் பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | மதிப்பீட்டு பகுப்பாய்வு தயாரிக்கப்படல் வேண்டும். |

(ஆ) **முன்னைய ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடுதல்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டின் வருமான குறியீட்டு இலக்கம் 05 இற்குரிய வருமானத்தில் கவனத்தில் கொள்ளக் கூடிய குறைவொன்று காணப்பட்டதுடன், அது 3 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது. | பகுப்பாய்வு ரீதியான ஆய்வின் பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | வருமானத்தை அதிகரிக்க கூடிய முறைமை தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

(இ) **நிலுவை வரி வருமானம்**

| | | |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 58,478,974,134 ஆன ஒட்டு மொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 57,709,049,189 அதாவது 99 சதவீதம் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற நிலுவை வருமானம் ஆகும். பழைய நிலுவை வரி வருமானங்களுக்குரிய தகவல்கள் திணைக்களத்தில் கண்டறிவதற்கு வசதியீனமாக இருந்தமை இந்த அறிக்கையின் வரைவிற்கு பதிலாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தால் எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நிலுவை வருமானம் ‘‘பொதுத் திறைசேரியின் ‘‘ அங்கீகாரத்தின் அடிப்படையில் பின்னர் செலுத்தும் அடிப்படையில் பொருள் விடுவித்தலின் காரணமாக’’ எழுந்திருந்ததாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டமையினால் அவ்வாறான அங்கீகாரம் வழங்கியமை தொடர்பாக | இவ்வாறு அறிக்கையிடப்பட்ட நிலுவை வருமான பெறுமதியை அறவிடுவதற்காக உரிய அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலுவை வருமான பெறுமதிகளுக்குரிய தகவல்களை கண்டறிதல் வசதியீனமாக இருந்தமையும் நடப்பாண்டின் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக உரிய நிறுவனத்திற்கு நிதி ஏற்பாடு ஒதுக்காதிருந்தமையினாலும் அறவிடலின் செயல் முன்னேற்றம் மிகவும் சிறிய பெறுமதியை கொண்டிருந்தது. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை தாமதம் இன்றி சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

பொது திறைசேரியில் விஷேட கவனத்திற்கு உட்பட வேண்டி காணப்பட்டது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

### 2.2.1 மீண்டெழும் செலவினம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை.** | | |
| | மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் தொடர்பாக 19 செலவின விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக 10 சதவீதம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி ஏற்பாட்டின் தேவை 2022.06.30 இல் உள்ளவாறு காணப்பட்ட பதவி அணியினரை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதுடன், அந்த பதவி அணியில் ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றமை, வெளிநாடு சென்றமை, சேவையில் இருந்து கேட்டு விலகியமை போன்ற காரணங்களின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு பகுப்பாய்வுரீதியில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **செலவினங்களின் முரண்கள்** | | |
| | 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 13 செலவின விடயங்களின் செலவினங்கள் அதிகரித்திருந்ததுடன், அதன் பிரகாரம் செலவினங்களை கட்டுப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இதற்குரிய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இயலுமான சகல செலவினங்களையும் வரையறுப்பதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஏனைய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்** | | |
| நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்களின் விபரம் மற்றும் பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்படாத 08 செலவின விடயங்களுக்குரிய 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட பொறுப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 34,767,112 ஆகும். | உரிய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு பட்டியலின் பிரகாரம் பொறுப்பு கூற்று சரியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், சுங்கத் திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சயாக பேணிச் செல்லும் நோக்கில் இந்த உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு பதிவேட்டில் சகல பொறுப்புக்களும் காண்பிக்கப்படல் வேண்டும். |

**2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகதாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுக்கப்பாட்டு முறையொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றமையை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை செய்து அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அந்த மீளாய்வின் எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொள்வதற்கு தவறியிருந்ததுடன், அதனை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்படாமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| அவதானிப்புக்கள் | | | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | | | | **இணங்காமைகள்** | | | |
| (அ) | 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டம் | | | | | | |
| | | (i) | 84(அ)(3) ஆம் பிரிவு | i. | உற்பத்திக் குதம் வசதிகள் (Manufacture in Bond) பெறப்படும் போது பொருட்கள் உள்நாட்டு பாவணைக்காக களஞ்சியத்தில் இருந்து விடுவிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது ‘‘இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களாக கருதி’’ சுங்க வரி கணிப்பிடல் மற்றும் செலுத்துதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், உள்நாட்டு ரீதியில் 30 சதவீதத்திற்கு குறைவான பெறுமதி சேர்க்கப்பட்ட வாகன உற்பத்திகாரர்களுக்கு கைத்தொழில் அமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற 70 சதவீத உற்பத்தி வரிச் சலுகை அந்த உற்பத்தி களஞ்சிய வசதிகள் பெறுகின்ற வாகனங்களின் | இந்த விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட மா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துணைப் பாகங்கள் ஒன்று சேர்க்கின்ற இரண்டு கம்பனியாலும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சுங்கத்தினாலும் கட்டளைச் சட்டத்தின் தொடர்புடைய ஏற்பாடுகள் புறக்கணிக்கப்பட்டு அந்த வரிச் சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது இரண்டு கம்பனிகளாலும் 326 வாகனங்கள் துணைப் பாகங்களை சேர்த்து உள்நாட்டு சந்தைக்கு விநியோகித்திருந்ததுடன், ஒன்று சேர்க்கப்பட்ட வாகனங்கள் களஞ்சியத்தில் இருந்து விடுவிக்கும் போது அறவிட வேண்டியஉ ற்பத்தி வரி ரூபா 350,432,000 ஆக இருந்த போதிலும், ரூபா 246,628,800 மாத்திரம் அறவிடப்பட்டமையால் அரசாங்க வருமானம் ரூபா 103,803,200 தொகையினால் குறைவடைந்திருந்தது. | | |
| ii. | வாகனங்கள் ஒன்று சேர்த்தல் போன்ற ஒரு கம்பனியால் 02 வாகன வகைகளுக்குரிய 2023 ஆம் ஆண்டின் போது 30 சதவீத உற்பத்தி வரி செலுத்தி சுங்கத்தில் இருந்து வாகனங்கள் விடுவித்தல் மிகவும் உயர்ந்த சந்தை விலையினை விட விற்பனை செய்துள்ள கணிசமான இலபாம் உழகைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் களஞ்சியத்தில் இருந்து வெளியிடப்படுகின்ற கிரயம் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா 6,307,763 ஆன வாகன வகையினை பெறுமதி சேர் வரியின்றி சந்தையில் விற்பனை விலை ரூபா 11,525,423 ஆக காணப்பட்டதுடன், ஏனைய வாகன வகைகளில் தொழிற்சாலைகளில் இருந்து வெளியிடப்படுகின்ற கிரயம் ரூபா 9,782,658 ஆன பெறுமதி சேர் வரியின்றிய விற்பனை விலை ரூபா 13,555,084 ஆக காணப்பட்டது. மேற்கூறப்பட்ட இரண்டு வாகன வகைகளினதும் கிரயம் மற்றும் சந்தையில் விற்பனை விலைகளுக்கு இடையே முறையே ரூபா 5,217,660 மற்றும் ரூபா 3,772,426 வேறுபாடு காணப்பட்டது. | | |
| (ii) | 153(2) பிரிவு | (ஆ) | இலங்கை சுங்கத்தின் வெகுமதி நிதியத்தில் வெகுமதி பணம் பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சிரின் இணக்கப்பாட்டை பெற்று அதற்காக பொருத்தமான திட்ட முறைமையொன்று தயாரிக்க வேண்டிய போதிலும், 1988 சனவரி 28 ஆம் திகதிய இலக்கம் பீஎல்இல் 118 என்ற திணைக்கள கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்படாடு பெறப்பட்டமையை உறுதிப்படுத்தாமல் 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான 12 வருட காலத்தில் வெகுமதி நிதியமாக உத்தியோகத்தர்களுக்காக ரூபா 19,429,331,820 | சுங்கத் திணைக்களத்தின் வெகுமதி நிதியத்தில் இருந்து வெகுமதி பணத்தை பகிர்ந்தளிப்பதற்கு உரிய 1988.01.28 ஆம் திகதிய பீஎல் 118 என்ற திணைக்கள கட்டளை மேன்முறையீட்டாளரினால் குணதிலக எதிரவ வீரசேன வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் செல்லுபடியான செயற்பாடுகள் மற்றும் அமுல்படுத்த முடியுமான ஆவணமாக வெளியிடப்பட்டிருந் | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |

தொகையும், ஒற்றர்களுக்காக ரூபா 2,980,886,848 தொகையும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டு ஆவணங்கள் நிறுவனத்தில் கண்டறிவதற்கு தற்போது முடியாதிருந்ததாக சுங்க பணிப்பாளர் நாயகத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

தமையால் அந்த வழக்கு தீர்ப்பிற்கு (Case Law) உட்பட்டிருந்தது. அவ்வாறு சுங்க வெகுமதி நிதியை பகிர்ந்தளிப்பதற்கு உரிய பீஎல் 118 என்ற திணைக்கள கட்டளை உரிய பொறிமுறையொன்று இடையே தேவையான அங்கீகாரத்துடன் விநியோகிக்கப்பட்டுள்ள ஆவணமாக இருந்ததாக மேல் நீதிமன்றத்தல் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக சட்ட மா அதிபர் திணைக்களத்தால் அனுப்பட்ட E/248/2002 என்ற 2002.12.31 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள சட்ட விளக்கமளித்தலின் பிரகாரமும் தெளிவாகின்றது. அதன் பிரகாரம் சுங்க வெகுமதி நிதியத்தில் இருந்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஒற்றர்களுக்காக செலுத்தப்பட்டுள்ள வெகுமதி பணத்திற்காக தெளிவான சட்ட ரீதியான அடிப்படையொன்று காணப்படுகின்றமையால் உரிய வெகுமதி பணத்தை

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்குதல் சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (iii) | 162 ஆம் பிரிவு | தொடர்புடைய பிரிவின் பிரகாரம் கைப்பற்றப்பட்டதன் பின்னர் சட்ட விரோதமாக வெளியிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக இயலுமான வரை கூடிய விரைவில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், பெறுமதி உறுதிப்படுத்தப்படாமல் 02 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையிலான பழைய பல்வேறு உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் மற்றும் பசளை போன்றவற்றுடன் 39 கொள்கலன்களும், 01 முதல் 05 வருடங்கள் வரை பழைய பல்வேறு வகையான பொருட்கள் அடங்கிய 448 கொள்கலன்களும், உள்ளக ரீதியான பொருட்கள் உள்ள அல்லாத 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை பழையதாக 116 கொள்கலன்களும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட 38 கொள்கலன்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் 01 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வரை பழைய ரூபா 186,058,922 பெறுமதியான அரிசியுடனான 53 கொள்கலன்களும் மனித பாவணைக்கு | அரிசியுடனான 53 கொள்கலன்களும் 2019 ஆம் ஆண்டு முதல் விடுவிப்பதற்கு அந்த கொள்கலன் கம்பனியுடன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி அடங்கிய கொள்கன்கள் தொடர்பாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்பட்டமையின் காரணமாக விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. சுங்க குறிப்பு சமர்ப்பிக்க முடியாதிருந்தது. அதன் பின்னர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் உரிய கொள்கலன்களை விடுவிப்பதற்கு சுங்க குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது மனித பாவணைக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டதாக அரச பகுப்பாய்வாளர் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட் | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட போதும், நுகர்வோர் சேவை அதிகார சபையின் மூலம் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் காரணமாக அவற்றை விலங்கு உணவாக ஈடுபடுத்துவதற்கு முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | டது. அவ்வாறே 2022.06.24 ஆம் திகதி நுகர்வோர் சேவை அதிகார சபையின் மூலம் வெளியிடப்பட்ட 2285/18 என்ற வர்த்தமானியின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விலங்கு உணவிற்காக மொத்த மூலப் பொருளாக ஈடுபடுத்துதல் தடுக்கப்பட்டுள்ளது . அதனால் உரிய கொள்கலன்களை விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) | XXIV அத்தியாயத்தின் 4 ஆம் உப பிரிவு | * | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாரு மரண அடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதி ரூபா 217,016 தொகையும், 01 முதல் 03 வருடங்கள் வரை பழைய கடன் மீதி ரூபா 626,014 தொகையும் ஒரு வருடத்தை விட குறைந்த கடன் மீதி ரூபா 323,954 தொகையும் காணப்பட்டது. | மரணமடைந்த உத்தியோகத்தர்களுக்கு இடையே சிலரிடம் இருந்து தீர்த்து வைக்கப்படாத கடன் மீதி தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுவதுடன், சிலரின் மரண பணிக் கொடை இது வரை செலுத்தப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| | | * | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாரு ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய 10 வருடங்களை விஞ்சிய கடன் மீதி ரூபா 349,446 | சில உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய பணிக் கொடை தயாரிக்கப்படுவதுடன், சிலரின் | |

| | | |
|---|---|---|
| | தொகையும், 03 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை பழைய கடன் மீதி ரூபா 556,817 தொகையும், 01 முதல் 03 வருடங்கள் வரை பழைய கடன் மீதி ரூபா 50,855 தொகையும், ஒரு வருடத்தை விட குறைந்த கடன் மீதி ரூபா 1,530,130 ஆகவும் காணப்பட்டது. | விபரங்கள் சேகரிக்கப்படுகின்றது. |
| * | இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து 10 வருடங்களை விஞ்சிய கடன் மீதி ரூபா 394,007 தொகையும் ஒரு வருடத்திற்கு குறைந்த கடன் மீதி ரூபா 373,393 தொகையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதி வரவு குறிப்புக்களின் மூலம் தீர்த்து வைத்தல் தொடர்பாக அவர்கள் சேவையாற்றுகின்ற நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| * | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 1,243,542 தொகையும், 01 முதல் 10 வருடங்கள் வரை பழைய கடன் மீதி ரூபா 233,836 தொகையும் ஆக இருந்ததுடன், சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 473,073 தொகையும், 01 முதல் 03 வருடங்கள் வரையான கடன் மீதி ரூபா 226,304 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த கடன் மீதி ரூபா 286,527 ஆகவும் காணப்பட்டது. உரிய உத்தியோகத்தரிடம் இருந்து இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | சில உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெறுவதுடன் சிலரின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றது. மீள் நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | XLVIII அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவு | உதவி சுங்க அத்தியட்சகரினால் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பகா சுங்க பணிப்பாளர் நாயகத்தால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டதுடன், உரிய மோசடி தொடர்பான தகவல்கள் சுங்கத்திடம் காணப்படாமையின் காரணமாக காண்பித்து உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திணைக்களம் பரிசோதனை எதுவும் நடாத்தியிருக்கவில்லை. | இது தொடர்பான பரிசோதனைகள் நடாத்தி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2008 யூன் 13 ஆம் திகதிய இலக்கம் LD-1,34(I) 2008 என்ற காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கை | அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்திருப்பதை கட்டுப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் கொம்பனி தொருவில் மோகன் வீதியில் இலங்கை சுங்கத்திற்குரிய உத்தியோகபூர்வ இல்ல வளவில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் 18 பேர் குடியிருப்பதுடன், சுற்றறிக்கையின் பிரகாரம் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோகன் வீதி இலக்கம் 40 என்ற இடத்தில் அமைந்துள்ள வீடமைப்பு தொகுதியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை விலகுமாறு கொழும்பு பிரதேச செயலாளருக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய காணி பகுதி சுங்க திணைக்களத்திற்கு கையேற்ற பின்னர் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி இலக்கம் 2/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2024 பெப்ரவரி 28 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்படாதிருந்தமை யால் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் ஏனைய தகவல்களின் சரியான தன்மையை கணக்காய்வின் போது பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 2023 இன் வருடாந்த செயலராற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் அரசாங்க நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் டசெயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட சுங்க விசாரணைகள் 8450 காணப்பட்டது. அதில் 3080 விசாரணைகள் 05 வருடங்களுக்கு மேற்பட்டும், 4348 விசாரணைகள் 02 முதல் 04 வருடங்கள் வரையும், 1022 விசாரனைகள் ஒரு வருடத்திற்கு உள்ளும் தீர்வு காணப்படாமல் காணப்பட்டது. விசாரனைகள் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் | 2015 யூலை மாதம் 2024.01.01 இல் உள்ளவாறு உரிய ஒட்டுமொத்த சுங்க விசாரனை நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் 2024.01.01 ஆம் திகதி வரையில் இலத்திரனியல் மத்திய மடுத்தப்பட்ட தகவல் முறையின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ளது. | விசாரனைகளை விரைவுபடுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைப்பற்றப்பட்ட பொருட்கள் அழிவடைந்தமை இழப்பிற்கு உட்பட்டமை பின்னைய காலத்தில் விற்பனையில் இருந்து உரிய பெறுமானம் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமை, ஒற்றர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அதைரியத்திற்கு உட்பட்டமை போன்ற பாதகமான நிலைமை எழுந்திருந்தது. | | |
| (இ) | சுங்க தவறுகளை தடுப்பதற்கு கொள்கலன் பிரசோதனையின் போது முறைமையொன்று அறிமுகப்படுத்துதல் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே முறைமை தொடர்புபடுத்தும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் விசாரனையை அடிப்படையாக கொண்டு சுங்க உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் போன்ற நிலைமை காணப்படும் போது மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட விசாரனைகளுக்கான அடிப்படையாக 1902 சுங்க தவறுகளுக்கு இடையே மிகைப் பொருள் இறக்குமதி சந்தர்ப்பம் 224 உம், வெளியிடப்படாத பொருள் இறக்குமதி 498 உம், பெறுமதி குறைவாக வெளியிடப்பட்டு இறக்குமதி செய்தல் 207 உம், தடை செய்யப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட பொருள் இறக்குமதிகள் 188 உம், சுங்க கட்டளைச் சட்டத்தை மீறப்பட்ட ஏனைய 211 சந்தர்ப்பங்களும் போன்ற சுங்க குற்றங்கள் | இறக்குமதி பொருட்களை விடுவிக்கும் செயற்பாடுகளின் ஆபத்தை அடிப்பைடயாக கொண்டு செயற்பாடுகளின் நடைமுறைகளின் மூலம் முறைமைப்படுத்துதல் தற்போது சுங்க ஆபத்து முகாமைத்துவ பிரிவில் ஆரம்பமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது முகாமைத்துவம் நிலைமையின் ஊடாக தேவையான செயற்பாடுகளாக இனங்காணப்பட்டதுடன், சுங்க நடவடிக்கைகளின் போது தரப்பினர்களான இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் முகவர்கள் போன்றவர்களும் பொருட்கள் நாடுகள் செலுத்தும் முறை போன்றவை இல்லாத குறிகாட்டிகளை அடிப்படையாக கொண்டு உரிய தரப்பினர்களின் முற்செயற்பாடுகள் முழுமையான தரவுகள், மிகுதி விடயங்கள் பகுப்பாய்வு செய்யும் இயலுமை உள்ள, உரிய பிரகாரம் சட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக தீர்மானம் எடுப்பதற்கு பயன்படுத்த முடியுமான, | சுங்க தவறுகளை இனங்காணல் மற்றும் தடுப்பதற்காக நவீன தொழில்நுட்ப முறைமை பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| இனங்காணக் கூடியதாக இருந்தது. எனினும், சட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக தீர்மானம் எடுப்பதற்கு பயன்படுத்த முடியுமான, மிகுதி தேவைகளுக்கு இணங்க எதிர்கால தேவைகளுக்கு இணங்க அபிவிருத்தி செய்து கொள்ளும் இயலுமை உடைய சுயமாக செயற்படும் ஆபத்து முகாமைத்துவ முறைமையொன்று (Automated Risk Management System) சுங்கத்தில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சுங்க பணிப்பாளர் நாயகத்தால் பதிலாக எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய தேவைகளுக்கு இனங்க அபிவிருத்தி செய்து கொள்ளும் இயலுமையை உடைய "சுயமாக செயற்படும் ஆபத்து முகாமைத்துவ முறைமையொன்று" (Automated Risk Management System) இலங்கை சுங்கத்தில் ஸ்தாபிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இந்தியாவில் இருந்து வெள்ளைச் சீனியாக வெளிப்படுத்தி இறக்குமதி செய்யப்பட்ட சீனி இருப்பு சுங்கத்தின் ஆபத்து முகாமைத்து பிரிவின் (RMU) மூலம் அதிக ஆபத்துடன் இருந்ததாக வகைப்படுத்தி ஆழமாக பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட போதிலும், அந்த பணிகள் சரியான பிரகாரம் மேற்கொள்ளாமை மற்றும் தெரிவு செய்யப்பட்ட தெரிவில் வழுக்கள் இனங்காணக் கூடிய அளவில் போதியளவில் இல்லாமையினால் அந்த கொள்கலனில் சிவப்பு இருப்பு காணப்பட்டிருக்கும் | | |

| | | | |
|---|---|---|---|
| | போது சுங்கத்தால் பொருள் விடுவிக்கப்பட்டுள்ளது. எனினும், இணக்கம் மற்றும் வசதிகள் வழங்கும் பிரிவிற்கு பின்னர் கிடைத்த தகவல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளியிடப்படாத சிவப்பு சீனி 20 கொள்கலன்களும் அதில் உள்ளமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரனையின் இறுதியில் இறக்குமதியாளருக்கு எதிராக ரூபா 500,000 தண்டப் பணம் மற்றும் ரூபா 189,293,778 உரித்தற்றல் விதிக்கப்பட்டிருந்ததுடன், இறக்குமதியாளர் அந்த தண்டப் பணத்தை செலுத்துவதற்கு இணங்கியதன் அடிப்படையில் அரசுடைமையாக்கப்படாமல் ரூபா 190,000,000 வங்கி பிணையின் அடிப்படையில் பொருள் இருப்பு சுங்க பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | விதிக்கப்பட்ட தண்டப் பணம் சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சருக்கு இலகுபடுத்தக் கூடியிருந்ததுடன், அந்த இறக்குமதியாளரால் அவ்வாறான இலகுபடுத்தப்பட்ட முறைப்பாடு முதலாவது சந்தர்ப்பத்தின் போது அமைச்சர் நிராகரித்திருந்ததார். | கௌரவ அமைச்சரால் தண்டப் பணம் ரூபா 30 மில்லியனால் இலகுபடுத்துவதற்கு சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டது. | தண்டப் பணத்தை இலகுபடுத்தும் போது சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், விதிக்கப்பட்ட தண்டப் பணத்தின் பின்னர் 30 மில்லியனால் குறைப்பதற்கு அமைச்சர் அங்கீகாரம் வழங்கியிருந்தார். | | |
| (ii) | சுங்க தவறினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 56,106,333 ஆகும். | பிரச்சினையுடனான சிவப்பு சீனி இருப்பு மெற்றிக் டொன் 607.55 அளவு சட்ட ரீதியாக இறக்குமதி செய்யப்பட்டிருக்குமாயின் அதற்காக செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 56,410,083 ஆக இருந்ததாக சுங்க பரிசோதனையின் கணிப்பீட்டில் செயற்பாடுகளில் அவதானிக்கப்பட்டது. வெள்ளை சீனி மற்றும் சிவப்பு சீனி என்ற இரண்டு வகைகளையும் மொத்த சீனி இருப்பில் நிறை மெற்றிக் டொன் 1,214.90 ஆக இருந்ததுடன், அந்த மொத்த அளவும் வெள்ளைச் சீனியாக வெளியிட்டு ரூபா 303,750.00 வரித் தொகை இறக்குமதியாளரால் இரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய குறித்துரைத்த வரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | **05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து விடுவிக்கப்படாமல் கொள்கலன்களில் உரிய இறக்குமதி குறிப்புக்களை அமுல்படுத்துதல்.** | | |
| | 2017 யூன் 13 ஆம் திகதி யப்பானில் இருந்து கொழும்பு துறைமுகத்தை அண்மித்த இலக்கம் MSK 8912638 என்ற கொள்கலனை பயன்படுத்திய இயந்திரம் மற்றும் மோட்டார் | சுங்க கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாகனங்களின் விபரங்கள் அடங்கிய பகுதியில் காணப்பட்ட தரவுகள் சந்தேகமாக இருந்தமையினால் சுங்க வெளியிடல்களை தயாரித்தல் | இறக்குமதி குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட தரவுகள் தொடர்பாகவும் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து தரவு முறைமையில் |

சைக்கிள் அடங்கியிருந்த போதும் இறக்குமதியாளரால் பொருட்கள் விடுவிப்பதற்கு சுங்க ஆவணங்கள் சமர்ப்பிக்காமையினால் 2018 மார்ச் 29 ஆம் திகதி வரையில் சுங்க விசாரனைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 05 வருங்கள் அளவிலான காலமாக விடுவிக்கப்படாத இந்த கொள்கலனுக்கு உரிய 2022 ஏப்ரல் 07 ஆம் திகதி இறக்குமதி குறிப்புக்களில் சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், சுங்க விசாரனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கொள்கலனில் அடங்கியுள்ள பொருட்களுக்காக 2022 யூன் 27 ஆம் திகதி வரையில் ரூபா 2,484,411 சுங்க வரி அறவிட்டு சுங்க வெளியிடல் பிரிவில் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்தின் போது சுங்க தரவுகள் மோட்டார் போக்குவரத்து தரவு முறைமைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், பௌதீக கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2023 செப்டம்பர் 15 ஆம் திகதி வரையிலும் பிரச்சினையுடனான கொள்கலன் கொழும்பு துறைமுகத்தில் இருந்து விடுவிக்க முடியாதிருக்கும் போது 02 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விசாரனைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இடையில் மற்றும் (process) சுங்க பணிப்பாளர் (வெளியீடு) மூலம் தற்காலிகமாக கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டதாக 2022.04.29 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. 2022.05.30 என்ற உள்ளக கடிதம் மூலம் சுங்க பணிப்பாளர் நிவாரணம் சுங்க பணிப்பாளர் (வெளியீடு) MSKU8912638 என்ற கொள்கலன் பரிசோதனைக்கு தேவையான இருந்ததாக அறிவிக்கப்பட்டதுடன், அதற்காக மேற்கூறப்பட்ட சுங்க கூற்றுக்கள் மிகுதி சுங்கி விசாரனை நடவடிக்கைகளுக்காக பொதுவான செயல் நடைமுறையின் இடையே (process) தயாரிக்குமாறும் வெளியிடப்பட்ட விடயங்களில் மாற்றங்கள் அவதானிக்கப்படுமாயின் அதற்குரிய நடவடிக்கைகள் சுங்க கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் கீழ் எடுக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த சுங்க கூற்றிக்குரிய வரித் தொகை செலுத்துதல் 2022.06.03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன், தற்போது அந்த கொள்கலன் CICT தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

சுங்க தரவுகள் உள்ளடக்கும் போது அந்த தரவுகளின் செல்லுபடி தன்மை தொடர்பாக கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | இறக்குமதி குறிப்புக்களில் சந்தேகமான நிலைமையுடன் செசி இலக்கம் காணப்படும் போது அது தொடர்பாக உரிய கவனம் செலுத்தாமல் சுங்க வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், மோட்டார் போக்குவரத்து தரவு முறைமையில் தரவினை உள்ளடக்குவதற்கு இடமளித்ததன் மூலம் கொள்கலன் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போது அதில் அடங்கியுள்ள பொருட்களுக்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வாகனங்கள் கடந்த காலத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தமை சுங்கம் அனுமதி வழங்கியிருந்தது. | | |
| (இ) | வருடாந்தம் 41,850,000 வாடகை தொகை செலுத்தி சுங்கத்தால் மட்டக்குளிய பிரதேசத்தில் தனியார் கம்பனி ஒன்றில் இருந்து பெறப்பட்டிருந்த காணியொன்று 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைப்பற்றப்பட்ட 435 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதுடன், அதில் 152 வாகனங்கள் 05 வருடங்களுக்கு முன் கைப்பற்றப்பட்டவை ஆகும். ருஹுணுபுர துறைமுக வளவில் மேலும் 202 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், அது 05 வருடங்களுக்கு முன் கைப்பற்றப்பட்ட 36 | சகல வாகனங்களுக்கும் உரியதாக இந்த நாட்டின் அந்நிய செலாவணி செலவிடுதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பது தொடர்பான குறித்துரைத்த கருத்து தெரிவிக்கப்படவில்லை. அநேகமான வாகனங்களுக்காக இன்னும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏலத்தில் இருந்து நியாயமான பணத்தை உழைப்பதற்கு முடியாமை தொடர்பாக குறித்துரைத்த கருத்து தெரிவிக்க முடியாதிருந்தது. ஏனைய கருத்துரைகளுக்கு இணங்குகின்றோம். | இந்த வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து விரைவாக மேற்கொண்டு முடிவுருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களும் ஆகும். இந்த சகல வாகனங்களுக்கும் உரிய இந்நாட்டின் அந்நிய செலாவணி செலவிடப்பட்டிருக்கும் போது நீண்ட காலமாக தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டதன் காரணமாக வாகனங்கள் துரப்பிடித்தலுக்கு உட்பட்டு ஓட்டத்திற்கு பொருத்தமற்ற நிலைமைக்கு உட்பட்டமை மற்றும் ஏலத்தில் இருந்து நியாயான நிதியை உழைப்பதற்கு முடியாதிருந்த நிலைமையும் ஏற்பட்டிருந்தது. | | |

**3.3 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் கம்பனி ஒன்றினால் போலியாக பட்டியல் சமர்ப்பித்து இறக்குமதி செய்யப்பட்ட விலங்கு உணவு இருப்பிற்குரிய அந்த கம்பனி கைவிடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்ட வரி பெறுமதி ரூபா 15,198.785 ஆக இருந்தது. குறைவாக காண்பிக்கப்பட்ட பொருட்கள் பெறுமதி (Under Value) ரூபா 63,519,586 ஆகும். எனினும், விசாரனை இறுதியின் போது மோசடி செய்வதற்கு முயற்சிக்கப்பட்ட சுங்க வரி பெறுமதிக்காக ரூபா 500,000 இலகுபடுத்தப்பட்ட உரித்தின்மையும் குறைத்து காண்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதிக்காக ரூபா 19,000,000 உரித்தற்றலும் | ரூபா 500,000 தொகை இலகுபடுத்தப்பட்ட உரித்தற்றலாக சுங்க கட்டளைச் சட்டத்தின் 129 மற்றும் 169 ஆம் பிரிவுகளின் கீழ் மோசடி செய்வதற்கு முயற்சிக்கப்பட்ட சுங்க வரி பெறுமதி இல்லாமல் விதிக்கப்பட்டிருந்ததுடன், சுங்க தவறையும் அறிவிக்க வேண்டியிருந்தமை போன்ற நிலைமையை கவனத்தில் கொண்டாகும். அந்த விசாரனைக் கோவைகளின் பிரகாரம் சுங்க தண்டப் பணம் முறையான சுங்க பரிசோதனை நடாத்தியதன் பின்னரே விதிக்கப்படுகின்றது. (Customs inquiry) மேலும் விசாரனை உத்தியோகத்தரால் இலகுபடுத்தப்பட்ட உரித்தற்றல்கள் சுங்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சட்ட வரைவிற்குள் | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய குறித்துரைத்த வரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| மாத்திரம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அது மேற்கொள்ளப்பட்ட தவறுடன் ஒப்பிடும் போது கணிசமான சலுகையாகும். இந்த இறக்குமதியாளரால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்ட 300 சந்தர்ப்பங்களுக்கும் அதிகமான எண்ணிக்கையில் மேற்கொள்ளப்பட்டதுடன், ஒரே எழுது வினைஞர் சேவையில் தொடர்ச்சியாக இந்த சேவையை வழங்கியிருந்தார். எனினும், உரிய சேவை தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்தாதிருந்ததுடன், எழுது வினைஞரின் சில மோசடியான செயற்பாடுகளினால் அரசாங்கத்திற்கு வரி தொகை இழக்கப்பட்டிருந்த நிலைமையை தடுப்பதற்காக காணப்படுகின்ற சட்ட ரீதியான ஏற்பாடுகள் திருத்த வேண்டியுள்ளமை அரசாங்க கணக்கு குழுவினாலும் திணைக்களத்திற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

(ஆ) மனித பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற 102 மீன் கொள்கலன்கள் சுங்கத்தில் இருந்து விடுவித்தல்.

(i) சீ செல்டசில் இருந்து தாய்லாந்து வரை பிரயாணம் செய்து மேற்கொள்ளப்பட்ட மீன்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட கொள்கலன்கள் உள்ளடங்கிள கப்பலொன்று கொழும்பு துறைமுகத்திற்கு அண்மட்ட

| | | | |
|---|---|---|---|
| | கடற்பரப்பில் தொழில்நுட்ப கோளாருகளுக்கு உட்பட்டு மின்சார வழங்கல் நிறுத்தப்பட்டதன் காரணமாக இலங்கையின் துறைமுகத்திற்கு அருகில் வந்திருந்ததுடன், அதில் 98 கொள்கலன்களில் காணப்பட்ட பழுதடைந்த மீன் இருப்பு வெளிநாட்டு கப்பலொன்றில் உள்நாட்டு முகவர் மூலம் கண்டறியப்பட்ட உள்நாட்டு தனியார் நிறுவனத்திற்கு சேதனப் பசளை உற்பத்திக்காக 2022 மார்ச் 09 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | இந்த மீன் இருப்பு உள்ளடங்கிய கப்பலின் தன்மை Transshipment Status ஆக இருந்த போதிலும் Import cargo status ஆக மாற்றுவதற்கு சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் நியமித்த குழுவினால் தீர்மானிக்கபட்டிருந்த போதிலும், அதற்காக HS Code வகைப்படுத்தல் குழுவொன்று முறையாக அங்கீகாரம் வழங்கப்படாதிருந்ததுடன், இந்த மீன் இருப்பு பழுதடைந்த தன்மைகயாக கொண்டு அறிக்கையிடப்பட்ட போதிலும், HS Code 511.91.10 இன் கீழ் Whole Round Tuna In Bulk ஆக சுங்க குறிப்புக்கள் உள்ளடக்கப்பட்டு அதன் பிரகாரம் சுங்கத்தால் 6,288,357 வரி அறவிடப்பட்டிருந்தது. | இதன் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் தற்போது எஞ்சியுள்ள 15 கொள்கலன்களும் மீள் ஏற்றுமதி செய்வதற்காக அன்றி சேதனப் பசளை உற்பத்திகாக சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தை பெறும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | மீன் இருப்பு பழுதடைந்த தன்மையைக் கொண்டு உள்ள சந்தர்ப்பமாக இருந்தமையினால் வகைப்படுத்தல் தொடர்பாக தெளிவற்றிருந்தது டன், அது வரையில் ‘‘வகைப்படுத்தல் குழுவொன்றுக்கு’’ அனுப்பி வைத்தல் அவசியமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் பழுதடைந்த (Fish-Waste) மீன் அடங்கி 98 கொள்கலன்களில் 40 கொள்கலன்கள் பழுதடைந்த மீன் சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படாமல் 03 சந்தர்ப்பங்களின் போது தாய்லாந்து மற்றும் மலேசியாவிற்கு மீன் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. சேதனப் பசளை உற்பத்திக்காக 43 கொள்கலன்கள் ஈடுபடுத்தப்பட்டமைக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரால் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், மிகுதி 15 கொள்கலன்களிலும் உள்ள தொடர்ந்தும் தனியார் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எனினும், சேதனப் பசனை தயாரிப்பதற்கு என கூறப்பட்டு நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட 40 மீன் கொள்கலன்களில் அதன் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாமல் மீன் கப்பலில் ஏற்றுவதற்கு அதில் ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்தின் பின்னர் நடவடிக்கை எடுத்ததன் பின்னர் ஆரம்ப தீர்மானம் பிழையாக இருந்தமை மேலும உறுதிப்படுத்தப்பட்டது. | இதன் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் தற்போது எஞ்சியுள்ள 15 கொள்கலன்களை மீன் ஏற்றுமதிக்காக அன்றி சேதன் பசளை உற்பத்திக்காக சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெறப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | தீர்மானம் எடுக்கும் போது மிகவும் பகுப்பாய்வு ரீதியில் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 விஷேட கணக்காய்வு அறிக்கை

பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட்ட 2024 ஏப்ரல் 09 ஆம் திகதிய இலக்கம் எஸ் பீ ஆர்/2024/01 என்ற “இலங்கை சுங்கத்தில் காணப்படுகின்ற பல்வேறு நிதியங்களின் முகாமைத்துவம்/ நிர்வாகம்” தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை தேசிய கணக்காய்வு நிறுவனத்தின் இணையதளமான naosl.gov.lk (https:naosl.gov.lk/web/index.php/en) இல் தரவிறக்கம் செய்ய முடியும்.